**அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம் மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை:திரு.C.தமிழ்செல்வன்.,**

**ந.க.எண்.4........./...............** **நாள்: 08.01.2024.**

பொருள்: மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் / சேலம் வட்டம் – அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம் மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி ச.எண்.161/8A1A –ல் 65.1/2 ஏக்கர் (or) 2650 ச.மீ பரப்பில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – உத்தேச சாலைகள் மற்றும் பூங்காவினை ஒப்படைத்தது – குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது – ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை :

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.19799/2020 போ, நாள்: 24.12.2020.
2. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 04.06.2004.
3. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 31.01.2020.
4. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை யுடி4(3) நாள்.23.09.2020.
5. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள்.09.12.2020.
6. அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017 – வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 30.08.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/ஏல்ஏ1, நாள்.08.09.2017.
8. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.SLM/XYYB3T4F/9010/2023/2022/TCP நாள்.13.02.2023.
9. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.SLM/XYYB3T4F/9010/2023/2022/TCP நாள்.20.02.2023.
10. மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட தான பத்திரம் எண்.7485/2023, நாள்.05.12.2023.
11. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்பட்ட தான பத்திரம் எண். 7484/2023, நாள்.05.12.2023.
12. மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் தீர்மான எண்...198 நாள்08.01.2024.

**உத்தரவு:**

அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி சர்வே எண்.161/8A1A -ல் 0.65.1/2 ஏக்கர் (or) 2650.00 ச.மீ பரப்பளவில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் SWP/ DTCP/SALEM/LAYOUT NO.306/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் பார்வை 9–ல் காணும் உத்திரவில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 25.83 ச.மீ (1.77%) உள்ளாட்சிக்கும் மற்றும் 27.55 சமீ (1.89%) TANGEDCO-க்கும் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 8–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 10 காணும் விவரப்படி

உள்ளாட்சிக்கும் மற்றும் 11 –ல் காணும் விவரப்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் (TANGEDCO) தானம் செய்யப்பட்டுள்ளது. பார்வை 12–ன் படி இம்மனைப்பிரிவுக்கு மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சியில் குடிநீர் வசதிகள், தெருவிளக்கு வசதிகள், சாக்கடை வசதிகள், தார் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது என தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேலும் நிலப்பயன் மாற்றுக் கட்டணம் ரூ.15000/– (பதினைந்தாயிரம் ரூபாய் மட்டும்) நாள் 20.12.2023 அன்றும், ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம் ரூ.10000/– (பத்தாயிரம் ரூபாய் மட்டும்) நாள் 27.03.2024ன்படி மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி மன்ற கணக்கில் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி ச.எண்.161/8A1A –ல் 0.65 1/2 ஏக்கர் (or) 2650.00 ச.மீ பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை 9–ல் காணும் செயலாணையின் படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு: வரைபடம்

தலைவர்
ஊராட்சி மன்றம்
மேட்டுப்பட்டி தாதனூர்

தலைவர்
மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சி
அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம்
சேலம் மாவட்டம்-636 103

பெறுதல்:

திரு.சாந்திலால் ரத்தோர்
கதவு எண். 55/3, லதா வில்லா, சேட் எக்ஸ்டன்சன்,
சேலம் ஸ்கேன் சென்டர் எதிரில், செங்கடேசபுரம்,
அஸ்தம்பட்டி, சேலம் மாநகரம்,
சேலம் – 636 007.

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்.
2. வட்டாட்சியர், வாழப்பாடி.
3. சார்பதிவாளர், அயோத்தியாப்பட்டணம்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அயோத்தியாப்பட்டணம்.